செ.வெ.எண்-3 நாள்:01.09.2017

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 2011, 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகை அரசால் வழங்கப்பட்டுள்ளது. புதுப்பித்தல் சலுகையினை பெறுவதற்கு பின்வரும் தகுதிகளை மனுதாரர்கள் பெற்றிருக்கவேண்டும்.

1) 2011, 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலவலக பதிவினை புதுப்பிக்க தவறியவர்கள் அவர்களது பதிவினை புதுப்பித்திருக்க வேண்டிய காலம் 01.01.2011 முதல் 31.12.2015 வரை இருக்கவேண்டும்.

2) இச்சிறப்பு புதுப்பித்தல் சலுகையை பெற விரும்பும் பதிவுதாரர்கள் அரசாணை வெளியிடப்பட்ட மூன்று மாதங்களுக்குள் அதாவது 21.11.2017 க்குள் ஆன்லைன் மூலமாக புதுப்பித்துக்கொள்ளலாம். மேலும் சம்மந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு வேலைவாய்ப்பு பதிவு அடையாள அட்டையுடன் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ விண்ணப்பம் செய்து புதுப்பித்துக்கொள்ளலாம்.

3) மூன்று மாத காலத்திற்கு பின் அதாவது 21.11.2017-க்கு பின் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4) இச்சலுகை 2011, 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் புதுப்பிக்கத்தவறி பின்னர் புதியதாக பழைய பதிவு மூப்பு இன்றி மறு பதிவு செய்திருந்தாலும் இப்புதுப்பித்தல் சலுகை பொருந்தும்.

5) 2011, 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் தங்களது பதிவுகளை புதுப்பிக்க தவறி பின்னர் புதியதாக மறுபதிவு செய்து அதன் பின்னர் இதர மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு தங்களது பதிவினை பதிவு மாற்றம் செய்தவர்களுக்கும் பொருந்தும்.

5) 2011, 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் பதிவினை புதுப்பிக்க தவறியவர்கள் கணினியில் மீண்டும் புதியதாக வேலைவாய்ப்பு அடையாள அட்டை பதிவு செய்தவர்கள், பழைய அடையாள அட்டை மற்றும் புதிய அடையாள அட்டை ஆகிய இரண்டு அடையாள அட்டையுடன் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும், 22.08.2017க்கு முன்னர் சிறப்பு சலுகையில் புதுப்பிக்க விண்ணப்பம் செய்தவர்கள் இவ்வலுவலகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இச்சலுகையை தகுதியுள்ள அனைத்து பதிவுதாரர்களும் பயன்படுத்திகொள்ளுமாறு கரூர் மாவட்ட ஆட்சியர் திரு.கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துக்கொள்கிறார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்